செய்தி வெளியீடு எண்: 297 நாள்: 27.05.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (27.5.2019) முகாம் அலுவலகத்தில், மலேசியா நாட்டில் நடைபெற்ற உலக கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற சென்னை, ஆவடியைச் சேர்ந்த மாணவர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அம்மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட 29 நபர்கள் நேரில் சந்தித்து, தாயகம் திரும்ப முடியாமல் கோலாலம்பூர் விமான நிலையத்தில் தவித்தபோது, சென்னை திரும்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரிய நேரத்தில் உதவி புரிந்தமைக்காக தங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

மலேசியா நாட்டின் செலாங்கூரில் மே 12 முதல் 19 வரை நடைபெற்ற உலக கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் ஆவடியைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு பதக்கங்களை வென்றனர். கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற 16 மாணவர்கள், அவர்களது 2 பயிற்சியாளர்கள், அம்மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட 29 நபர்கள் தாயகம் திரும்ப முடியாமல், 22.5.2019 அன்று கோலாலம்பூர் விமான நிலையத்தில் தவிக்கும் செய்தியை அறிந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அந்த 29 நபர்கள் சென்னை திரும்ப அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி, மலேசியாவில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் தமிழ்நாடு அரசு அவர்களுக்கான இருப்பிட வசதி, உணவு, சென்னை திரும்ப விமான பயணச்சீட்டுகள் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் துரிதமாக வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கையின் காரணமாக 29 நபர்கள் பாதுகாப்பாக 23.5.2019 அன்று சென்னை திரும்பினர்.

பாதுகாப்பாக சென்னை திரும்ப, தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கை எடுத்தமைக்காக அந்த கராத்தே போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள், பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட 29 நபர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (27.5.2019) முகாம் அலுவலகத்தில் சந்தித்து தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாடுகளில் பணிபுரிந்த தமிழகத்தைச் சார்ந்த தொழிலாளர், மீனவர்கள் உள்ளிட்ட 221 நபர்களை மீட்டு பத்திரமாக தாயகம் அழைத்துவரப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில் குமார், இ.ஆ.ப., மற்றும் அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல இயக்குநர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப.,ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9